# யா/நாவற்குழி மகா வித்தியாலயம்



# பரிசில் நாள் - 2008

நிகழ்ச்சி நாள் - 15.10.2009

தலைமை

**திருமதி வ.மேகலிங்கம் அதிபர்**

பிரதம விருந்தினர்

**உயர்திரு குமாரசாமி சிவானந்தம்**

**(கோட்டக்கல்விப் பணிப்பாளர் சாவகச்சேரி)**

பரிசில் வழங்கல்

**திருமதி வசந்தி சிவானந்தம்**

# பாடசாலைக்கீதம்

உயிரினும் இனியநம் உயர்வாழ்வினையே
உணர்வொடு போற்றுவோம் வாரீர்!
ஓங்குக கல்வி செல்வ மோடிகை
ஒளி திகழ் தெய்வீக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை
~ உயிரினும்

ஒரு குலமென உயிர் வாழ்வோம்
உளமதில் நடுநிலை சேர்வோம்
உயர்தர நமதுயர் மகாவித்தியாலயம்
உருவளர் நாவற்குழியினை நினைவோம்
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

# யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்

**பரிசளிப்பு நிகழ்வு-2008**

**நிகழ்வு நாள் 15.10.2009**

**வியாழன் காலை 9.00 மணி**

**தலைமை:** திருமதி வ.மேகலிங்கம் **(அதிபர்)**

**பிரதம விருந்தினர்:**

**உயர்திரு.குமாரசாமி சிவானந்தம்.** அவர்கள்

*(கோட்டக்கல்விப்பணிப்பாளர்,கல்விப்பணிமனை,தென்மராட்சி)*

பரிசில்கள் வழங்குனர் :

**திருமதி வசந்தி சிவானந்தம்.** அவர்கள்

அன்புள்ளங்களை மகிழ்வுடன் அழைக்கும்

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்,கல்விசாரா ஊழியர்கள்,பாடசாலை

அபிவிருத்திச்சங்கத்தினர்.

# யா / நாவற்குழி மகாவித்தியாலயம்
# பரிசளிப்பு நிகழ்வு – 2008

## நிகழ்வு நாள் – 2009.10.15
## வியாழன் காலை 9.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

- ❖ விருந்தினரை மண்டபத்திற்கு அழைத்து வருதல்
- ❖ மங்கல விளக்கேற்றல்
- ❖ இறைவணக்கம்
- ❖ பாடசாலைக்கீதம்
- ❖ ஆசியுரை
- ❖ வரவேற்புரை
- ❖ அதிபர் அறிக்கை
- ❖ பரிசில் வழங்கல்
- ❖ பிரதம விருந்தினர்உரை
- ❖ நன்றியுரை
- ❖ கலை நிகழ்வுகள்



# அதிபர் அறிக்கை

## வணக்கம்

2008ஆம் ஆண்டுக்கான எமது வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வருகைதந்து எங்களைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கோட்டக்கல்விப்பணிப்பாளர் உயர்திரு. குமாரசாமி சிவானந்தம் அவர்களே, அவர் தம் துணைவியார் திருமதி. வசந்தி சிவானந்தம் அவர்களே, ஆசியுரை வழங்கி எமது விழாவை இறை அருளுடன் ஆரம்பித்து வைக்க நல்லை ஞான சம்பந்த ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருமகா சந்நிதானம் அவர்களே, மற்றும் எமது விநயமான அழைப்பை ஏற்று மகிழ்வுடன் வருகை தந்து விழாவைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும் கல்வி மான்களே, அதிபர்களே, ஆசிரியர்களே, நலன்விரும்பிகளே, பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களே, பழைய மாணவர்களே, அனைவருக்கும் பொதுவான இறைவனை வணங்கி உங்களை வருக வருகவென வணக்கம் கூறி வரவேற்பதில் புளகாங்கிதம் அடைகிறேன்.

கல்வி என்பது கடல் போன்றது. கடலில் எத்தனையோ செல்வங்களைப் பெற்றுக் கொள்கின்றோம். செல்வங்களை எடுப்பதற்காக கடலில் மூழ்குபவர்கள் சிலர், அக்கரை சேர்வதற்காக நீந்துவார்கள் சிலர், மீன் பிடிக்க, முத்தெடுக்க இன்னும் பொழுது போக்கிற்காகக்கூடக் கடலில் நீந்துபவர்களும் உள்ளனர். எது எவ்வாறாயினும் பல போராட்டங்களின் பின்பே நாம் எண்ணிய பயனைப் பெற்றுவிட முடிகிறது. கல்விக் கடலும் இத்தகையதே. கல்விக்கடலில் குளித்தவர்கள் தமது பெருமுயற்சியால் அலை

கைளுடன் போராடி இறுதியில் வைத்தியராக, பொறியியலாளராக, கணக்காளராக, ஆசிரியராக அவரவர் தகுதிக்கும் முயற்சிக்கும் ஏற்ப முத்தெடுத்து மகிழ்கின்றனர்.அத்தகைய முத்தை எடுப்பதற்காக இடை யிடையே பல வெற்றிகள், சாதனைகள், படைப்புக்கள் நிகழத்தான் செய்கின்றன. அத்தகைய சாதனைகளுக்கு கிடைக்கும் வெகுமதியே இப்பரிசில் நாள் நிகழ்ச்சிகள் என்றால் அது மிகையாகாது.

எமது வித்தியாலயத்தின் பரிசில் நாள் விழாவில் எமது அழைப்பைப் பெருமனதோடு ஏற்று மகிழ்வுடன் வருகை தந்து வெள்ளி மகுடத்திலே தங்கப் பொட்டு வைத்தாற்போல் திகழ்ந்திருக்கும் எமது வலயக்கல்விப்பணிமனையின் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. குமாரசாமி சிவானந்தம் அவர்களே, தாங்கள் இவ் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வின் பிரதம விருந்தினர் என்று பேசுகின்றபோது எம்முள்ளம் மிகவும் பூரிப்படைகிறது. "மதிப்பு என்பது பதவிகளைப் பெற்றிருப்பது அல்ல. அவற்றைப் பெற நாம் தகுதி உள்ளவர்களாக இருப்பதே" என அன்று தத்துவஞானி அரிஸ்டோட்டில் கூறி வைத்த வாக்கு இன்று உங்களால் இவ் வித்தியாலயத்தில் நிறைவேறக் கண்டு களிக்கின்றோம்.

பிரதம விருந்தினர் அவர்களே, நீங்கள் கல்விப்புலத்தில் தடம்பதித்த தடயங்களை ஒருமுறை மீட்டுப்பார்க்கின்றேன். யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலே கல்வி கற்று முதன் முறையாக கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிக் கலைப்பட்டதாரியாக வெளியேறிய தாங்கள் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக ஆற்றிய சேவைகள் அளப்பரியன என்பதை நாம் நன்கு அறிவோம். தாங்கள் கல்வி கற்ற பாடசாலையிலேயே 1997 தொடக்கம் அதிபராக சேவையாற்றிய தாங்கள், அவ்வித்தியாலயத்தின்

வளர்ச்சியில் ஒரு மைற்கல்லாகவே திகழ்ந்துள்ளீர்கள். நவோதயப் பாடசாலையாக, வெளிச்சவீட்டுப் பாடசாலையாக உயர் நிலை பெற்றதோடு, 2008 ஆம் ஆண்டில் பிள்ளைநேயப்பாடசாலைகளில் முதற் தரமான விருதையும் பெற்றுக் கொடுத்துள்ளீர்கள். உங்களுடைய சேவைக்காலத்தில் கல்வி வளர்ச்சியில் மிக முன்னணியில் திகழ்ந்தீர்கள் என்பதற்கு ஒரு சான்று. 2008 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் தமிழ்மொழிப்பிரிவில் முதலாமிடம் கிடைத்தமை. அதுமட்டுமன்றி விளையாட்டு, தமிழ்மொழித்தினப்போட்டிகளில் தேசிய மட்டம்வரை வெற்றிச் சாதனைகளைப் பெற்றுக் கொடுத்த சிறப்புக்களையும் நாம் அறிவோம். அத்தகைய வெற்றிச் சாதனைகளைப் புரிந்த உங்களுக்குச் சாவகச்சேரி கோட்டக் கல்விப்பணிப்பாளராக 2009 ஆம் ஆண்டு பதவியுயர்வு கிடைத்தமை ஒன்றும் புதினமானதல்ல. "ஒரு மனிதன் எதற்குத் தகுதியுடையவனாகத் தன்னை ஆக்கிக் கொள்கிறானோ அதனை இயற்கை வலியக் கொண்டு வந்து தக்கதருணத்தில் அவனுக்கு கொடுத்துவிடுகிறது" என்பது சுவாமி சிற்பவானந்தரின் வாக்கு அந்த வாக்கிற்கிணங்கவே தங்களுக்கு இவ்வுயர் பதவி கிடைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

மகிழ்ச்சிகரமான உங்களது சேவையால் உயர்ந்து நிற்கும் தாங்கள் எமது வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு எம்மையும் இப் பாடசாலையையும் பெருமைப்படுத்தியுள்ளீர்கள். உங்களது சேவை நடுநிலையாக மென்மேலும்வளர்ந்து ஒரு சிறந்த கல்விப் பணிப்பாளராக உயர வேண்டும் என நீங்கள் தினம் தொழும் வேம்படி விநாயகனை நாமும் வேண்டி வாழ்த்தி வரவேற்று நிற்கின்றோம்.

இன்றைய விழா தெய்வீகப் பொலிவுடன் அமைய வேண்டுமென்ற எமது ஆவலைப் பூர்த்தி செய்யும் அருளுரையாக ஆசி வழங்கி இந் நிகழ்வை இறையருளுக்குட்படுத்திய நல்லை ஞான சம்பந்த ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருமகா சந்நிதானம் அவர்களை இரு கரம் கூப்பி வருக வருக என வரவேற்கின்றோம்.

இன்றைய நாளில் எமது மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்க காத்திருக்கும் திருமதி . வசந்தி சிவானந்தம் அவர்களே நற்பண்பாளர் கரம் பிடித்துவாழும் வரம் பெற்ற நீங்கள் உண்மையில் பெண்களில் பெருமை பெற்றவர் என்றே கருதுகின்றோம் உங்கள் கரங்களால் பரிசில் பெற இருக்கும் நம் குழந்தைகள் உண்மையில் பாக்கியம் பெற்றவர்களாவர். உங்களது வருகையால் பெருமை உற்றிருக்கும் நாம் உங்களை வருக வருக என வரவேற்று நிற்கின்றோம்.

## எமது வித்தியாலய ஆசிரிய ஆளணி

எமது வித்தியாலயத்தில் 27 நிரந்தர ஆசிரியர்களும் தற்காலிக இணைப்புப் பெற்ற 5 ஆசிரியர்களும் பகுதி நேர ஆசிரியர் ஒருவரும் J.R.S. அனுசரணையுடன் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரும் தொண்டராசிரியர் இருவரும் கடமையாற்றுகின்றனர். ஒற்றுமையே பலம் என்ற முதுமொழிக்கு இலக்கணமாக உள்ள எமது ஆசிரியர்கள் இப்பிரதேசத்தின் மாணவச் செல்வங்களின் இயல்பறிந்து சேவையாற்றுவது பாராட்டுக்குரியது.

**இடமாற்றம் பெற்று வந்தோர் – 2008**

திருமதி . த. ஜீவபாலன்

திருமதி . த. சிவநாதன்

திரு.ந. ஜெயரூபன்

திரு.க. ஈஸ்வரன்

**2008 இல் இடமாற்றம் பெற்றுச் சென்றோர்.**

திருமதி. யோ. செல்வநாயகம்
திருமதி. சு. அற்புதராசா
செல்வி. சோ. கிருஸ்ணவேணி
திரு. நா. கருணாகரன்
} நிரந்தர ஆசிரியர்

திருமதி. சு. சுந்தரகுமார்
திரு.வை. பிறேம்குமார்
திருமதி. ம. நரேந்திரராஜா
திருமதி. ஆ. மரியறீற்றா
செல்வி. த. மாதங்கி
} தற்காலிக இணைப்பு

**பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சென்றோர்**

செல்வி. சி. சிவாதரி

**ஓய்வு பெற்றோர்**

திரு. C.J. திலகரட்ணம்

அர்ப்பணிப்போடு மாணவச் செல்வங்களுக்கு தாங்கள் ஆற்றிச் சென்ற நிறைவான பணியை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

## கல்விசார், கல்விசாரா ஆளணியினர்

எமது பாடசாலையின் கணினி அலகிற்குப் பொறுப்பாக திருமதி. சர்மிளா ரவிசங்கர் தொண்டரடிப்படையில் மிகச் சிறந்த சேவையாற்றி வருகின்றார். திரு. செ. அழகராசா, திரு. சி. இராஜேந்திரன், திரு. ந. லோகநாதன், ஆகியோர் பாடசாலையின் வளர்ச்சியில் எம்முடன் இணைந்து அரும்பணி ஆற்றிவருவது மிகவும் பாராட்டக்கூடிய விடயமாகும். மேலும் திரு. க. சுந்தரலிங்கம் அவர்கள் 2003 யூன் மாதத்திலிருந்து இன்றுவரை ஊதியம் எதுவும் இன்றி பாடசாலைக்குள்ளிருந்து அரும்பணியாற்றிக் கொண்டிருப்பதும் பாடசாலையைப் பேணிப்பாதுகாப்பதும் முன்னோடியான செயற்பாடாகும். இவருக்கு வித்தியாலயத் தாய் சிரந்தாழ்த்தி தனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறாள். பாடசாலையின் சுகாதாரத் தொழிலாளியாக கடமையாற்றிய திரு. சின்னத்தம்பி இராஜேஸ்வரன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவர் ஆற்றிய நற்பணிகளை கல்லூரிச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகிறது.

இப் பாடசாலையின் தொண்டரடிப்படையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய செல்வி. பவித்திரா பாலச்சந்திரன் இப்பிரதேசத்தின் கிராம சேவையாளராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். அவர் இப் பாடசாலைக்கு ஆற்றிய சிறப்பான சேவையை நன்றியுடன் உவந்து நிற்கிறோம்.

2009 இல் மாணவர் தொகை

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1-5 | 121 | 104 | 225 |
| 6-9 | 85 | 86 | 171 |
| 10-13 | 70 | 80 | 150 |
| மொத்தம் | 276 | 270 | 546 |

## 2008 இல் மாணவர் திறமை வெளிப்பாடு
## க.பொ.த. (சா.த) 2008

தோற்றியோர் - 39

சித்தியடைந்தோா – 13

**க.பொ.த. (உ.த) 2008.**

தோற்றியோர் - 11

பல்கலைக்கழகத் தகுதி பெற்றோர் - 09

பல்கலைக்கழகம் சென்றோர் - 01

பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்ற செல்வி. கஜனி சுப்பிரமணியம் சாவகச்சேரி இலங்கை வங்கியால் கௌரவிக்கப்பட்டதோடு பாடசாலையின் அதிபருக்கம் பதக்கம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை –2008**

தோற்றியோர் - 23

சித்தி பெற்றோர் -02

100 புள்ளிக்கு மேல் - 07

செல்வன் சி. சிவகரன் - 150

**வலயமட்டம் 3 ஆம் இடம்**
**மாவட்ட மட்டம் 13ஆம் இடம்**

## இணை பாடவிதானச் செயற்பாடுகள்

### இல்ல மெய் வல்லுநர் திறனாய்வு

எமது வித்தியாலயத் தாய் இவ்வருடத்திற்கான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வினை மிக விமரிசையாக நிறைவேற்றியுள்ளாள். இந் நிகழ்விற்குத் தற்போது யாழ் வலயக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றும் திருமதி . அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து எங்களைக் கௌரவப்படுத்தி இருந்தமையை இந்த நாளில் நாம் நன்றியுடன் நினைவில் கொள்கிறோம்.

### உதைபந்து ஆண்கள் வலய மட்டம்

| | |
|---|---|
| 16 வயதுப் பிரிவு | 1 ஆம் இடம் |
| 19 வயதுப் பிரிவு | 3ஆம் இடம் |

### வலயமட்ட மெய்வல்லுனர் போட்டி

மேற்படி போட்டியில் இரண்டு முதாலமிடங்கள், இரண்டு இரண்டாமிடங்கள், மூன்று மூன்றாமிடங்கள் கிடைக்கப்பெற்றன. மாணவர் தம் செயற்பாடுகளுக்கு அயராது உழைத்த ஆசிரியப் பெருந்தகைகளையும் பழைய மாணவர்களையும், பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஆசிரியர் திரு. சி. மதியழகனையும் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

### தமிழ்த் தினப்போட்டி

தமிழ் மொழித்திறனை வளர்ப்பதற்காக தமிழ் மன்றக்கூட்டங்கள் நடைபெறுவதுடன் போட்டிகள் நடத்தப்பட்டு திறமையை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு த் தமிழ்த்தின விழாவில்

சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. வலய மட்டப் போட்டிகளில் கட்டுரை வரைதல் மூன்றாமிடம் ஆகிய இடங்களைப் பெற்று மாணவர்கள் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். தமிழ் மொழியை கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் இருந்த போதும் இதற்குப் பங்காற்றிய ஆசிரியப் பெருமக்கள் பாராட்டுக்குரியவர்கள்.

**ஆங்கிலதினப் போட்டி**

வலயமட்டத்தில் நடைபெறந்ற ஆங்சிலதினப் போட்டிகளில் இரண்டு முதலாமிடங்களையும், மூன்றாமிடம் ஒன்றையும் எமது மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். மாவட்ட மட்டத்தில் செல்வி டிலக்சனா சிவபாதம் Copy writing இல் முதலாமிடம் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இவருக்கு எனது பாராட்டுக்கள். தரம் 1, 2 இற்கான ABOE ஆங்கில நிகழ்ச்சியில் எமது மாணவர்கள் குடும்பப் பாடசாலைகள் மட்டத்தில் முதலாமிடத்தையும் வலய மட்டத்தில் இரண்டாமிடத்தையும் தட்டிக் கொண்டனர். இவர்களைப் பயிற்றுவித்த தரம் 1 ஆசிரியர் திருமதி. நந்தகுமாருக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் நன்றி கூறிப் பாராட்டுகின்றேன்.

**இந்துமா மன்றம்**

எமது மாணவர்களிடையே சைவப் பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் வளர்ப்பதற்காக இந்துமாமன்றம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. வெள்ளிக்கிழமைகள் தோறும் சிறப்பு ஆராதனைகள், இடம்பெற்று மாணவர் தம் சிறப்புச் சொற் பொழிவுகளும் நடைபெறுவதுடன், நாயன்மார் குரு பூசைகளும் கொண்டாடப்படுகின்றன. நவராத்திரி, காலத்தில் கோலம் போடுதல்,

மாலை கட்டுதல், தோர.ணம் பின்னுதல் போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டு வாணி விழாவின் போது பரிசில்களும் வழங்'கப்படுகின்றன.

**இந்துமா மன்றம் சார்பான பரிசில்கள் – 2008**

மாநகராட்சி மன்ற சமய அறிவுப் போட்டி

***செல்வி.அ. நிறோஜினி*** அதிவிசேட சித்தி

**சைவ பரிபாலன சபை**

***செல்வி. மௌ . தர்சிகா*** – தங்கப்பதக்கம்

***செலவி. அ. சுவர்ணா*** – வெண்கலப்பதக்கம்

**வலயமட்ட புராணப் போட்டி**

சிறப்புச்சான்றிதழ் – செல்வி. சு. கஜானி

செல்வி.சி. கம்சிகா

மாலை கட்டுதல் இரண்டாமிடம் செல்வி. க. நிசாந்தினி

மேற்படி மாணவச் செல்வங்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இதற்காக அரும்பணி ஆற்றிய திருமதி . யோ. பாலச்சந்திரனையும் ஏனைய சமயம் கற்பித்த ஆசிரியப் பெருந் தகைகளையும் பாராட்டி வாழ்த்ததுகின்றேன்.

**கணித விஞ்ஞான மன்றம்**

கணித விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்கில் வலயக்கல்விப் பணிமனையால் நடத்தப்பட்ட குறுவினாடி வினாப் போட்டியில் முதல் பத்து இடங்களில் விஞ்ஞானப் பிரிவிற்கு மூன்று

இடங்கள் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களை நெறிப்படுத்தும் விஞ்ஞான ஆசிரியர்கள் திரு. மு. செங்கையாழியான், திருமதி. த. ஜீவபாலன் பாராட்டுக்குரியவர்கள்.

**உயர்தர மாணவர் மன்றம்**

மேற்படி மன்றமானது பாடசாலையின் வளர்ச்சியில் துடிப்புடன் இயங்குகின்றது. இம்மன்றம் 15.02.2008 இல் தனது வருடாந்த ஒன்று கூடலை மிகச் சிறப்பாக நடத்தியது. யாழ் மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கியமை எமது மாணவர்களுக்குச் சிறந்த அனுபவமாகும். இந் நிகழ்விற்கு மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் திரு. க. சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகவும் எமது பாடசாலையின் பழைய மாணவன் திரு. ஐ. இரட்ணாகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வை மிகச் சிறப்பாக நடத்திய பொறுப்பாசிரியர் திரு.க. ஞானராசாவிற்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள்.

**வணிக குறுவினாப் போட்டி**

வலய மட்டத்திலான மேற்படி போட்டிகளில் தரம் 10 இல் செல்வன் ப. கௌதமனும், தரம் 11இல் செல்வி அ. சுவர்ணாவும், பாராட்டுச் சான்றிதழைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு வழிகாட்டிய திரு. சி. நித்தியானந்தராஜா, திரு. நா. கருணாகரன் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**கணினி மென்பொருளாக்கப் போட்டி**

க.பொ.த.(உ.த) வகுப்பிற்கான கணினி மென் பொருளாக்கப் போட்டியில் ஆசிரியை செல்வி சிவாதரி சிவநாதன் மாகாண மட்டத்தில்

பாராட்டுச் சான்றிழ் பெற்றமை மகிழ்ச்சிக்குரியது. செல்வி சிவாதரியை இத்தருணத்தில் பாராட்டி வாழ்த்துகின்'றேன்.

**வழிகாட்டலும் ஆலோசனையும்**

கல்விப்புலம் மிகச் சிறப்பாக அமைய வழிகாட்டலும் ஆலோசனையும் மிக முக்கிய தேவையாகி விட்டது. எமது பாடசாலைக்கு அது பொன்னான வாய்ப்பாக உள்ளது. இத்துறைக்கு அரும்பணியாற்றி வரும் திரு. வே. க. சந்திரகுமார் தொழில் வழிகாட்டல், சமூக, வழிகாட்டல், நெறி பிறழ்வைத் தடுத்தல், பிரிந்த பெற்றோரை இணைத்தல், பாடசாலையின் கௌரவத்தைப் பேணிப்பாதுகாத்தல், போன்ற செயற்பாடுகளை மிகவும் பொறுமையான முறையில் ஆற்றி வருவது பாராட்டுக்குரியது. இந்தியாவில் இரண்டு தடவைகள் இத்துறையில் பயிற்சி பெறச் சந்தர்ப்பம் கிடைத்தமை சிறப்பான அனுபவமாகும். இத்துடன் எமது பாடசாலையில் மிகச்சிறந்த மாணவ பாடகர்களை இணைத்து சமூகத்தை சிறப்பாக வழிநடத்தும் வகையிலான இறுவட்டு ஒன்றை மிக விரைவில் வெளியீடு செய்ய உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவரின் முயற்சிகளுக்கு எமது ஆசிரியப் பெருந்தகைகள் வழங்கிவரும் ஒத்துழைப்பும் பாராட்டப்பட வேண்டியது.

**முறைசாராக் கல்வி**

எமது பாடசாலையில் க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய உயர்தரம் கற்கத் தகுதியடையாத 34 மாணவர்களுக்கு மின்னியல் பயிற்சி வழங்கப்பட்டது. லண்டன் கனகதுர்க்கா அம்மன் ஆலய நிர்வாகம் இதற்கான நிதியை வழங்கியிருந்தது. இதற்காக 2007 இல்

25 மாணவர்களுக்கு விசேட பயிற்சி பெற்ற விரிவுரையாளர் திரு. சு. ஞானலிங்கம் அவர்களால் மிகச் சிறப்பான முறையில்பயிற்சி வழங்கப்பட்டது. இதன் நிறைவு விழாவில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் சமயப் பணியாளன் திரு. ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, சுயதொழிலை ஆரம்பிப்பதற்கான ஒரு தொகுதி உபகரணங்களும் பாடசாலையால் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மிகுதிப் பணத்திலும் வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராப் பிரிவின் உதவியுடனும் 2008 நவம்பர் வரை 14 மாணவர்கள் மின் உபகரணங்கள் திருத்தும் பயிற்சி நெறியைத் தொடர்ந்தனர். தற்போது பயிற்சி பெற்ற மாணவர்கள் சுய தொழில் வாய்ப்பைப் பெற்று வருமானம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளுக்கும் இச்சான்றிதழுடன் தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளனர். இப்பயிற்சி நெறிக்கு 3லட்சம் ரூபா நிதி உதவி வழங்கிய லண்டன் கனகதுர்க்கா அம்மன் ஆலயத்தின் அக்காலப்பகுதிக்குரிய நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் பயிற்சி பெற்ற மாணவர் சார்பாகவும் பொறுப்பாசிரியர், விரிவுரையாளர் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எழுத்தறிவூட்டல் வகுப்பு

யுத்த அனர்த்த நிலைமைகளால் இடம்பெயர்ந்த மாணவர்கள் பலர் ஆரம்ப, இடைநிலைக்கல்வியில் பெரும்பகுதியினை இழந்துள்ளனர். சில வருடங்களோ அன்றி மாதங்களோ பாடசாலைக்குச் செல்லாமல் இருந்தமை கவலைக்குரிய விடயமாகும். இத்தகைய

மாணவர்களை ஆய்வு செய்து பாடசாலை நேரம் தவிர்ந்த மேலதிக நேரங்களில் ஆரம்பப்பிரிவு, இடைநிலை கீழ்ப்பிரிவு, இடைநிலை மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாகப் பிரித்து திருமதி.மீ.பரமேஸ்வரன், திரு. க. ஈஸ்வரன் ஆகியோரால் கையேடுகள் தயாரிக்கப்பட்டு பின்வரும் ஆசிரியர்கள் மேலதிக வகுப்புக்களை எடுத்து வருகின்றனர்.

திரு.க.ஈஸ்வரன்

திரு.ந.ஜெயரூபன்

திரு.ஞா.செல்வநாயம்

திருமதி.யோ.பாலச்சந்திரன்

செல்வி.யே.ஜெனிற்றா

திருமதி.ஞா.மரியநாயகம்

செல்வி.ம.சுதர்சினி

திருமதி.இ. நித்தியானந்தராசா

திரு.செ. ஜெயரூபன்

திருமதி. நா.செல்வன்

திருமதி.ஷா.ஞானதேவன்

எமது பாடசலையில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவனும் எழுத வாசிக்கவேனும் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க சமூகம் கடமைப்பட்டுள்ளது.



## பிள்ளைநேயப் பாடசாலை

தென்மராட்சிக்கல்வி வலய பிள்ளைநேயப்பாடசாலை திட்டத்தின் கீழ் மதிப்பிடலின் அடிப்படையில் எமது பாடசாலை A தரத்தைப் பெற்று முதல் 5 இடங்களில் தெரிவு செய்யப்பட்டு கேடயத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டது. இதற்கு மிகத் துரிதமாகச் செயற்பட்ட ஆசிரியர் சமூகம் பாராட்டப் படக்கூடியது. அதன் வெளிப்பாடாகச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் எமது பாடசாலையின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப்பைகளை அன்பளிப்பாக வழங்கியதோடு இரும்பு அலுமாரி ஒன்றையும் கவரிடுதல் இயந்திரம் (லெமனேற்றிங்) ஒன்றையும் வழங்கியமை சிறப்பம்சமாகும். இவ்வாறான வளங்களைத்தேடி இணைத்தபடி எமது பிள்ளைநேய செயற்பாடுகள் தொடர்கின்றன.

## பாடசாலை – பெற்றோர்–பழையமாணவர் உறவு

மாணவரின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் வகுப்பு ரீதியாகவும், பாடசாலை ரீதியாகவும் நடைபெறுகின்றன. பெற்றோர் தாமாகவே முன் வந்து சிரமதான வேலைகளில் ஈடுபடுகின்றனர். இந்த வகையில் சான்றோர் சனசமூக நிலையம் சார்ந்த பெற்றோர் பாராட்டைப் பெறுகின்றனர். பாடரீதியாக நடைபெறும் செயற்பாட்டுப் பட்டறைகளில் பெருமளவிலான பெற்றோர் பங்கேற்கின்றமை சிறப்பானதாகும். தொடர்ந்தும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் நீங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமென்று நாம் அவாவி நிற்கின்றோம். பழைய

மாணவர்கள் எமக்கு ஆற்றிவரும் பங்களிப்ப அளப்பரியது. வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் உள்ள பழைய மாணவர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவது எமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

## ஆரம்பப்பிரிவு

எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவின் தரம் 1 இற்கான கால்கோள்விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. தென்மராட்சிக்கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திரு. சு.கிருபானந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். வலய மட்டத்தில் நடத்தப்பட்ட உறுப்பெழுத்துப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, வாய்ப்பாட்டு மனனப்போட்டி, பண்ணிசைப் போட்டி,தமிழறிவுப்போட்டி ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சிகளையும் சாதாரண தேர்ச்சிகளையும் பெற்றுள்ளனர். வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சிறுவர் சித்திரப்போட்டியில் தரம் 4இல் பு.நிருஷன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் தரம் 5இல் 157 புள்ளிகளைப் பெற்ற சி.சிவகரன் யாழ்மாவட்ட இராணுவத் தளபதியிடமிருந்து துவிச்சக்கரவண்டியையும், தினக்குரல் பரிசையும், சாவகச்சேரி பிரதேசசெயலகம் நடத்திய கௌரவிப்பு நிகழ்வில் கேடயத்தையும் பரிசையும் பெற்று பெருமை சேர்த்தார். இப்பிரிவின் வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு தன்னை அர்ப்பணித்து உழைத்து வரும் பகுதித்தலைவர் திருமதி. மீ. பரமேஸ்வரனுக்கும் இவருடன் இணைந்து சிறந்த பணியாற்றும் அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் பாராட்டை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## கல்விக்கண்காட்சி

எமது பாடசாலையில் தரம் 1-13 வரையான மாணவர்களின் சுய வெளிப்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் 23.05.2008 இல் கல்விக்கண்காட்சி நடைபெற்றது. பிரதம விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. நா.சத்தியநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக விவசாய சம்மேளனத்தலைவர் திரு.தி.தங்கவேல் அவர்களும் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியை அயற்பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் பார்வையிட்டுப் பயன் பெற்றனர்.

## அகமலர் சஞ்சிகை வெளியீடு

எமது மாணவர்களின் பல்வேறு ஆக்கங்களைத் தாங்கிய வண்ணம் மாதம் ஒருமுறை உளநலத்திறன் விருத்திக் கழகத்தால் அகமலர் சஞ்சிகை வெளியிடப்படுகிறது. முதலாவது வெளியீட்டை 09.04.2008 அன்று தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருவாளர் கு.பிறேமகாந்தன் அவர்கள் ஆரம்பித்து வைக்க, மதிப்பீட்டுரையை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயமகாவித்தியாலய அதிபர் திரு.மு. பாலசுப்பிரமணியம் அவர்கள் நிகழ்த்தியதோடு பாடசாலை நூலகத்திற்கு இரண்டு நூல்களை பும் அன்பளிப்புச் செய்து வைத்தார். இந்நிகழ்வோடு சேர்த்து தெரிவு செய்யப்பட்ட மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம் பெற்றது. இந்நிகழ்வின் பொறுப்பாசிரியர் திரு.வே.க.சந்திரகுமார் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

## ஆசிரியர்தினம்

ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் ஆசிரியர்தின விழா பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினராலும் பழைய மாணவர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றது. 2008 ஆம் ஆண்டு ஆசிரியர்தினவிழா, பிரதித்தலைவர் திரு.கோ.ஜீவபாலன் தலைமையில் நடைபெற்றது. தினக்குரல் ஆசிரியர் திரு.ஆ.சி.நடராசா பிரதம விருந்தினராக கலந்து ஆசிரியர்களை கௌரவித்து உரையாற்றி பரிசில்களும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்புவிழா

வருடாந்த பரிசளிப்பு விழா பழைய மாணவன் திரு.மு.சிறிகாந்தனும் அவர்தம் சகோதரிகள் திருமதி. சாந்தி நடராஜா திருமதி. ஜெயந்தி, திருமதி. இராஜேந்தி ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் 2008.10.21 இல் சிறப்பாக நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச்செயலகத்தின் திட்டப்பணிப்பாளர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.வே.பாராளன் கலந்து சிறப்பித்தார்.

## அன்பளிப்புக்கள்

எமது பாடசாலை மாணவர்கள் 25 பேருக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.சி.ஜே.திலகரட்ணம் அவர்களின் முயற்சியால் Y.M.C.A மூலம் சப்பாத்துக்கள் வழங்கப்பட்டன. யாழ் மாவட்ட வண பிதா நேசகுமார் அடிகளார் நேரில் வழங்கிவைத்தார்.

மேலும் 14.07.2008 அன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தினால் துவிச்சக்கரவண்டி உட்பட பல கற்றல் உபகரணங்கள் தந்தையை இழந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.அத்துடன் முறைசாரா விரிவுரையாளர் திரு.சு.ஞானலிங்கம் அவர்களாலும் 10சோடி பாதணிகள் வழங்கப்பட்டன. எமது பிரதேசத்தைச் சேர்ந்த இப்பாடசாலையின் பழைய மாணவன் திரு.வேலுப்பிள்ளை மயில்வாகனம் 2008 க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்த 5 மாணவர்களுக்கு தொடர்ந்து கற்பதற்கான சிறு நிதி உதவியை வழங்கியுள்ளார். மேலும் தொடர்ச்சியான பல உதவிகள் அவரால் வழங்கப்பட்டு கல்விச் செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இத்தகைய பெருமனதுள்ள பெருமக்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

## கணினி அலகு

எமது பாடசாலை மாணவர்களின் கணினிக்கல்வியை விருத்தி செய்வதற்கான அலகு ஒன்றை அமைப்பதற்கான வேண்டுகோளை ஏற்று பாரளுமன்ற உறுப்பினர்களான உயர்திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன், திருமதி. பத்மினி சிதம்பரநாதன், திரு.ஸ்ரீகாந்தா ஆகியோர் நிதியுதவி வழங்கி உள்ளனர். இவர்கள் எமது

நன்றிக்குரியவர்கள். கணினி அறைக்குரிய தளபாடங்கள், SEMP திட்டத்தின் கீழ் பெறப்பட்டன. கணினி அலகை 06.10.2008 அன்று வலயக்கல்விப்பணிப்பாளர் உயர்திரு.கு.பிறேமகாந்தன் அவர்கள் திறந்து வைத்து கணினிக்கல்வியை ஆரம்பித்து வைத்தார். இவ் உதவியை வழங்கிய அனைத்து உள்ளங்களையும் சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.. கணினி அலகிற்கு யாழ் கட்டளைத் தளபதி மேஜர் சந்திரசிறி அவர்களும் இரண்டு கணினிகளை வழங்கி வைத்தார்.

## தொலைபேசி–பக்ஸ் வசதி

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியில் தொடர்பாடல் வசதி மிகவும் முக்கியமானது. அந்த வகையில் இன்ரநெற் வசதியுடன் தொலைபேசி ஒன்றை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவியை இப்பாடசாலையின் நலன் விரும்பியான திரு.துரைசாமி பஞ்சாட்சரம் என்பவர் வழங்கியிருந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவருக்கு எமது நன்றிகளை கூறவிரும்புகின்றேன்.

## திருத்தவேலை

யுனிசெப், PSDG என்பன விஞ்ஞான ஆய்வுகூட திருத்தவேலைக்கும் பிரதான மண்டப திருத்தவேலைக்கும் தளபாடத்திருத்தத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்திருந்தன. இவற்றை வலயக்கல்வி அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.வே.பாராளன் அவர்கள் சிறப்பான ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தி இருந்தார்.அவருக்கும் எமது பாடசாலைச்சமூகம் சார்பாக

நன்றி கூறுவதோடு வலயக்கல்விப் பணிப்பாளர் மதிப்பிற்குரிய திருமதி. அ.வேதநாயகம் அம்மா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பாடசாலை நுழைவாயில்

தற்பொழுது கனடாவில் வாழும் எமது பிரதேசத்தைச் சேர்ந்த திரு.திருமதி. சந்தியா சிறிகாந்தன் அவர்கள் தமது தாயார் திருமதி. சித்திரா முத்துராசா அவர்களின் நினைவாகப் பாடசாலை நுழைவாயில் அமைத்து உதவியுள்ளார். அத்துடன் பரிசில் நாள் செலவினத்தையும் வழமைபோல அவரே பொறுப்பேற்றுள்ளார். அவருடைய சிறப்பான மனப்பாங்கையும் தேசப்பற்றையும் பாராட்டி நிற்பதோடு அவரும் அவர் தம் குடும்ப உறவுகளும் பல்லாண்டு நலமே வாழ எல்லாம் வல்ல இறைவனை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

## முகாமைத்துவக்குழு

பாடசாலையின் முன்னோடியான எத்தகைய செயற்றிட்டங்களை முன்னெடுத்தாலும் பலமான ஒத்துழைப்பு வழங்கி வரும் பிரதி அதிபர் திருமதி. சு.செல்வராசா, அலுவலகப்பணிகளிலும் அபிவிருத்தி ஆலோசனைச் செயற்பாடுகளிலும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிவரும் சிரேஷ்ட பகுதித்தலைவர் திரு. ஆ. க.இரவீந்திரன். பொது வைபவங்கள், ஒழுக்கவிழுமியங்கள் என்பவற்றில் முன்னின்று உழைக்கும் பகுதித்தலைவர் திருமதி.யோ.பாலச்சந்திரன். பௌதீக வளத்தேடல் தொழிநுட்ப ஆலோசனை புதிய நுட்பங்களை புகுத்துதல் என்பவற்றில் திறமையுடைய திரு.வே.க.சந்திரகுமார். இணை பாட

விதானச் செயற்பாடுகளில் தன்னலமற்ற சேவையாற்றும் திரு.சி. மதியழகன். வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கோட்பாட்டுக்கு உதாரணமாக எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்துள்ள ஆரம்பக்கல்விப் பகுதித்தலைவர் திருமதி. மீ.பரமேஸ்வரன் ஆகியோரின் அளப்பரிய சேவையை நாவற்குழி வாழ் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் சார்பாக பாராட்டி வாழ்த்துகிறேன்.

## நூலகம்

நூலகத்திற்கு கட்டிடமில்லாத போதும் இரண்டு வகுப்பறைகளில் நூலகச் செயற்பாடுகள் சிறப்புற நடை பெறுகின்றன. 02.06.2008 இல் சமூகநலத்துறை அமைச்சு ஒருதொகுதிப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. அதனைவிட இவ்வருடம் கல்வியமைச்சு ESDG Book Blood programme திட்டத்தின் கீழ் புத்தகக் கொள்வனவிற்காக ரூபா 38700 ஐ பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமதி. ஞா.மரியநாயகம் நூலகச் செயற்பாடுகளைச் மிகவும் சிறப்பாக கையாண்டு வருவது பாராட்டுதற்குரியது. இவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

எமது பாடசாலையின் அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் 10.05.2008 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் எமது

பிரதேசம் சுற்றிவளைப்பிற்கு உட்பட்டிருந்த போதும் 120 இற்கு மேற்பட்ட பெற்றோர்கள் சமுகமளித்திருந்தமை பாராட்டிற்குரியது என வலயக்கல்வி அலுவலகம் சார்பாக வருகை தந்திருந்த திரு.பொன்.தர்மேந்திரன் அவர்கள் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். அன்பான பெற்றோர்களே நீங்கள் பாடசாலைக்கு வழங்கி வரும் பூரண ஒத்துழைப்பு எமக்கு மிக்க மகிழ்ச்சியை தருகிறது. இரண்டு கைகளும் சேர்ந்து தட்டும்போதே ஓசை எழுகின்றது. எனக்கும் ஆசிரியர் சமூகத்தின் ஒரு கைக்கு பலமான ஒரு கையாக நீங்கள் இருப்பது உங்களின் எதிர்கால சுபீட்சத்தை நன்கு உணர்ந்து செயற்படுகிறீர்கள் என்பதை கோடிட்டுக்காட்டுகிறது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திருமதி. செல்வராணி சந்திரன் அவர்களையும் பாராட்டி மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் இப்பிரதேசத்தின் 10 சனசமூகநிலைய தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

## மதிய உணவு

03.06.2009 இல் மதிய உணவு வழங்கல் தொடர்பான உலக உணவுத்திட்டக்குழுவினர் பாடசாலைக்கு விஜயம் செய்தனர். பாடசாலையில் நடைபெறும் உணவு வழங்கல் செயற்பாட்டைப் பார்வையிட்டு பாடசாலைச் சமூகத்தைப் பாராட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்காலத் தேவைகள்

**1. கற்பித்தல் சாதனம்**

தற்கால கல்விப் படிமுறையின் வளர்ச்சியில் போட்டோப்பிரதி இயந்திரத்தின் தேவை மிகவும் முக்கியமாகவுள்ளது. இதற்காக உதவிகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

**2. மைதானப் புனரமைப்பு**

2007 இல் மைதானத்திற்கு அத்திவாரமிட்டு ஒரு தொகுதி மண் நிரப்பப்பட்டது. மேலும் மேற்கு,தெற்குப் பக்கங்களின் அத்திவார வேலைகளும் வலையடித்தல் வேலைகள், எஞ்சிய பகுதிகளுக்கு மண்நிரப்புதலும் செய்யவேண்டி உள்ளது.

**3. சமையலறைத் திருத்தம்**

தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட சமையலறையின் கூரைப்பகுதிகள் சேதமடைந்துள்ளது. இதனைப் புனரமைப்புச் செய்தல் மிகவும் அவசியமாகும்.

**4. இடவசதி**

அழகியற் பாடங்கள்,வழிகாட்டல் ஆலோசனைச் சேவை என்பவற்றிற்கு தனித்தனி இடவசதிகள் தேவைப்படுகின்றன. இவற்றை நிறைவு செய்யுமிடத்து கல்விச் செயற்பாடுகள் மேலும் சிறப்படைய வழி ஏற்படுகின்றன.

# நன்றியுரை

இந்த இனிய நன்னாளை எமக்கு வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றியைக் கூறுகின்றேன். இந்த நன்னாளினை உங்களுக்கு ஏற்படுத்தி பரிசில்களை வழங்கி உங்கள் உள்ளங்களை மகிழ்விப்பதற்கு நிதி உதவியை வழங்கிவரும் இப்பாடசாலையின் பழைய மாணவன் திரு.மு.சிறிகாந்தன் குடும்பத்தினர் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ இப்பிரதேச மக்கள் சார்பாகவும், பாடசாலைச்சமூகம் சார்பாகவும் வாழ்த்தினை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய பிரதமவிருந்தினர், அவர் தம்பாரியார் சிறப்புவிருந்தினர், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் நலன் விரும்பிகள், கிராமசேவையாளர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். இப்பரிசில் நாள் நிகழ்வை சிறப்புற நடத்த எம்முடன் இணைந்து துடிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இப்பாடசாலையின் பழைய மாணவனும் தொழில் நுட்ப உத்தியோகத்தரும் சமாதான நீதவானுமாகிய திரு. கோ.ஜீவபாலன் அவர்களின் பணியையும் இன்றைய நாளில் பாராட்டி என்னோடு ஒத்துழைத்த அனைத்து பெரு மக்களுக்கும் மீண்டும் நன்றி கூறி அமைகின்றேன்.

நன்றி
வணக்கம்

திருமதி. வ. மேகலிங்கம்
அதிபர்

## அதிபர்,ஆசிரியர் விபரம்
**( 2008 )**

1.திருமதி.வ.மேகலிங்கம் B.A Dip-in.Edu.
PrincipalS.L.P.S1
2.திருமதி.சு.செல்வராசா B.A Dip-in.Edu.
Deputy Principal S.L.T.S 1
3. திரு.ஆ.க.இரவீந்திரன் B.A Dip-in.Edu.
Sectional Head S.L.T.S 1
4.திருமதி.மீ.பரமேஸ்வரன் B.Ed Primary Trd.
Sectional Head S.L.T.S 2.I
5.திரு.சு.கிருபான்ந்தன் Dip-in.Agriculture
S.L.T.S 1
6.திருமதி.யோ.பாலச்சந்திரன் Hindusiam Trd.
Sectional HeadS.L.T.S 2.I
7.திரு.வே.க.சந்திரகுமார் B.Sc,S.T.O.T,Thenmaradchi
S.L.T.S 1 Dip-in.Master
Counsellor
8.திருமதி.ந.மகேந்திரன் Home.Eco.Trd.
S.L.T.S 2.I
9.திரு.க.ஈஸ்வரன் B.A(Hons) Dip-in.Edu
S.L.T.S 2.II
10.திரு.சி.நித்தியானந்தராஜா B.B.A Dip-in. Edu
S.L.T.S 2.II
11.திரு.சி.மதியழகன் B.com(Hons) Dip-in. Edu
S.L.T.S 2.II (Merit) Primary
Trd.
12.திரு.தி.அற்புதராசா B.A Special Trd.Maths
S.L.T.S 2.II
13.திரு.மு.செங்கையாழியன் Special Trd.Science
S.L.T.S 2.II
14.திரு.ப.கிருபானந்தன் Primary Trd.
S.L.T.S 3.II
15.திரு.ஞா.செல்வநாயகம் Social StudiesTrd.
S.L.T.S 2.II
16.திருமதி.வ.கேதீஸ்வரசர்மா B.A (Special Economics)
S.L.T.S 3.I

17.திருமதி.ஞா.மரியநாயகம் R.C Trd.
S.L.T.S 2.II

18.திருமதி.ந.குகராஜ் English Trd.
S.L.T.S 2.II

19.திருமதி.நா.செல்வன் Primary Trd.
S.L.T.S 2.II

20.திருமதி.ச.நந்தகுமார் Primary Trd.
S.L.T.S 2.II

21.செல்வி.ச.தயாநிதி Maths Trd.
S.L.T.S 2.II

22.செல்வி.ம.சுதர்சினி B.A.
S.L.T.S 3.I

23.திருமதி.ஷா.ஞானதேவன் N. Dip in Teach (Agriculture)
S.L.T.S 3.I

24.திருமதி.பு.தனபாலசிங்கம் Primary Trd.
S.L.T.S 3.I

25.திருமதி.த.சிவநாதன் Dip.in.(Music)
S.L.T.S 3.I

26.திருமதி.த.ஜீவபாலன் N. Dip in Teach (Science)
S.L.T.S 3.I

27.திரு.ந.ஜெயரூபன் Com.Trd
S.L.T.S 2.II

**இணைப்பு**

01.திரு.செ.ஜெயரூபன் H.N.D.A
S.L.T.S 3.I

02.திரு.க.ஞானராசா B.A (Hons) (Geo.Spe)
S.L.T.S 3.I

03.திருமதி.இ.நித்தியானந்தராசா N. Dip in Teach Primary
S.L.T.S 3.I

04.செல்வி.ஜெ.ஜெனிற்றா B.A
S.L.T.S 3.I

05.செல்வி.நா.சாயிதர்சினி H.N.D.A

## தொண்டராசிரியர்கள்

01.திரு.ம.புவனதாஸ் Dip.in.Fisheres Dip.in Political

02.செல்வி.இ.மரியசுவர்ணா G.C.E (A/L).

03.செல்வி.வே.தேவறஞ்சினி G.C.E (A/L).

04.திருமதி.த.ஜெயக்குமார் G.C.E (A/L).

05.திருமதி.ச.ரவிசங்கர் G.C.E (A/L).

### கல்வி சாரா ஊழியர்

1.திரு.சி.இராஜேந்திரன் ஆய்வுகூட உதவியாளர்

2.திரு.செ.அழகராசா பாடசாலைத் தொழிலாளி

3.திரு.ந.லோகநாதன் காவலாளி

### பாடசாலைத் தொண்டர்

1.திரு.க.சுந்தரலிங்கம்

## பரிசு பெறும் மாணவர் விபரம் 2008

தரம் 01 இல் பரிசு பெறுவோர்விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| ஐ.உ மையாள் | தமிழ்,கணிதம், சுற்றாடல், சைவசமயம் | | |
| யோ.ஷமிதா | கணிதம் | தமிழ், சைவசமயம் | சுற்றாடல் |
| ச.சரணியா | | | தமிழ் |
| சி.மதுசா | | கணிதம் | |
| செ.திவாகரன் | | சுற்றாடல் | கணிதம்,சைவசமயம் |
| பெ.மைக்கலின் | கிறிஸ்தவம் | | |
| யே.ஜெயசாலினி | | கிறிஸ்தவம் | |
| த.எஸ்ரா | | | கிறிஸ்தவம் |

**தரம் 02 இல் பரிசு பெறுவோர்விபரம்**

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| து.மதுஜா | சைவசமயம் | தமிழ் | |
| நி.சதுஜன் | | சைவசமயம் | கணிதம், சுற்றாடல |
| சி.பிரியங்கா | | | சைவசமயம், சுற்றாடல் |
| சி.றஜீவன | தமிழ்,கணிதம் | சுற்றாடல் | |
| ப.அரவிந் | | | தமிழ் |
| செ.வினுாசன | | கணிதம் | |
| ஜெ.பவிதர்ஷன் | கிறிஸ்தவம், சுற்றாடல் | | |
| ஜெ.ஜெகதீஸ | | கிறிஸ்தவம் | |
| த.பிரவீன் | | | கிறிஸ்தவம |
| பொதுத்தகைமை: சி..றஜீவன் | | | |

**தரம் 03 இல் பரிசு பெறுவோர் விபரம்**

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| சி.கஜந்தா | தமிழ்,சுற்றாடல், ஆங்கிலம் | | கணிதம், சமயம் |
| ச.நிதர்சன் | | தமிழ்,கணிதம் ஆங்கிலம்.சமயம் | |
| செ.மதுசன் | கணிதம் சமயம் | சுற்றாடல் | தமிழ், ஆங்கிலம் |
| அ.அஜினா | | | சுற்றாடல் |
| ஸ்.ஜெனார்த்தனன் | கிறிஸ்தவ சமயம் | | |
| அ.ரலிஸ் | | கிறிஸ்தவ சமயம் | |
| றெ.றெபேக்கா | | | கிறிஸ்தவ சமயம் |

## தரம் 04 இல் பரிசு பெறுவோர் விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| செ.சிந்துஜா | சைவசமயம்,தமிழ், கணிதம்,சுற்றாடல், ஆங்கிலம் | | |
| சு.சுபாஸ்ரன் | கணிதம் | ஆங்கிலம் | சைவசமயம் |
| ர.பிரியா | | சைவசமயம்,தமிழ் | ஆங்கிலம் |
| கி.சர்மியா | | | தமிழ்.கணிதம் |
| பு.நிருஷன் | | கணிதம்,சுற்றாடல் | |
| அ.பகீர்த்தனா | | | சுற்றாடல் |
| க.றெபேக்கா | கிறிஸ்தவசமயம் | | |
| ம.கிறிஸ்ரீனா | | கிறிஸ்தவசமயம் | |
| சி.மிதுர்ஜா | | | கிறிஸ்தவசமயம் |
| த.தர்சன் | பொதுத்தகைமை | | |

## தரம் 05 இல் பரிசு பெறுவோர் விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| த.பிரதீபன | ஆங்கிலம்,தமிழ், சமயம் | சுற்றாடல்,கணிதம் | |
| சு.டிலந்தன் | | தமிழ்,சமயம் | சுற்றாடல்,கணிதம் |
| சி.சிவகரன் | சுற்றாடல்,கணிதம் | ஆங்கிலம் | |
| க.சிந்துஜன் | | | க.சிந்துஜன் |
| வி.லவலக்சனா | | | சமயம் |
| ஜெ.ஜெயப்பிரிதா | கிறிஸ்தவசமயம் | | |
| அ.யூலிகா | | கிறிஸ்தவசமயம் | |
| ஸ்.ஸ்ராலின் | | | கிறிஸ்தவசமயம் |
| பொதுத்தகைமை: செ.நிதியா தரம் 5B | | | |

## தரம் 06 இல் பரிசு பெறுவோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ந.பவதாரணி | சமயம்,நடனம் | | தமிழ்,புவியியல் |
| கோ.தாரங்கினி | கணிதம்,வரலாறு | சமயம்,தமிழ், ஆங்கிலம் வா.தே.குடியுரிமை சங்கீதம | விஞ்ஞானம் சுகாதாரம் |
| சு.அபிராமி | மிழ்,ஆங்கிலம் வா.தே.குடியுரிமை சுகாதாரம்,சங்கீதம் | கணிதம், விஞ்ஞானம் | வரலாறு,சமயம் |
| பா.திலக்ஷன் | விஞ்ஞானம்,புவியியல் | | கணிதம், ஆங்கிலம்,சங்கீதம் |
| ஸ்ரீ.தனுசா | | | வா.தே.குடியுரிமை |
| ந.தசாங்கன் | | வரலாறு | |
| மு.முரளிதரன் | கிறிஸ்தவம் | புவியியல்,சித்திரம் | |
| பீ.மனாசே 6B | | கிறிஸ்தவம் | |
| ஜெ.ஜெனோசன் | | | கிறிஸ்தவம்,சித்திரம் |
| ஜெ.ஜெசிந்தினி | | | நடனம் |
| பு.ஜெனிபா | | சுகாதாரம்,நடனம் | |
| பொதுத்திறமை:பு.ஜெனிபா 6B | | | |

## தரம் 07 இல் பரிசு பெறுவோர் விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| ச.லட்சிகா 4ஆம் இடம் வா.தே | தமிழ்,கணிதம், விஞ்ஞானம்,புவியியல் குடியியல்,வரலாறு சுகாதாரம், செ.மு.தொ.நு | சைவசமயம்,சங்கீதம் | வாழ்க்கைத் தேர்ச்சி |
| பா.பிரியதர்சினி | | தமிழ்,விஞ்ஞானம், குடியியல்,நடனம் | சைவசமயம் |
| இ.கஸ்தூரி | சைவசமயம் | கணிதம்,ஆங்கிலம் புவியில்,வரலாறு வாழ்க்கைத்தேர்ச்சி | தமிழ்,நடனம் |

| | | | |
|---|---|---|---|
| ர.நிதர்சன் | | | கணிதம்,புவியியல் குடியியல்,சங்கீதம் |
| மௌ.தர்சிகா | நடனம் | | விஞ்ஞானம் |
| ம.வலன்ரீனா | கிறிஸ்தவம் | சித்திரம் | |
| ஞா.திவாகரன | சித்திரம் | கிறிஸ்தவம் | |
| ப.பத்மலோசன | | | கிறிஸ்தவம் |
| கு.டுவாரதா | ஆங்கிலம் | செ.மு.தொ.நு | வாழ்க்கைத்தேர்ச்சி |
| இ.கல்யாணி | சங்கீதம் வாழ்க்கைத்தேர்ச்சி | செ.மு.தொ.நு | வரலாறு,சுகாதாரம் ஆங்கிலம் |
| இ.தேனுசா | | செ.மு.தொ.நு | |
| ச.லதூசன் | | சுகாதாரம் | |
| பொதுத்திறமை:க.நிசாந்தினி 7B | | | |

## தரம் 08 இல் பரிசு பெறுவோர் விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| த.தார்மீகன் | சைவசமயம், தமிழ்,வரலாறு வா.தேர்ச்சி, | கணிதம்,புவியியல், குடியியல் | சங்கீதம் |
| செ.பகீரதன் | கணிதம்,புவியியல், குடியியல்,சங்கீதம் | | சுகாதாரம்,வா.தேர்ச்சி வரலாறு,ஆங்கிலம் சைவசமயம் |
| கோ.அரவிந்தன | ஆங்கிலம்,விஞ்ஞானம் சைவசமயம், | வரலாறு சங்கீதம்,குழு வா.தேர்ச்சி | தமிழ்,கணிதம் |

| | | | |
|---|---|---|---|
| ஞா.தீபிகா | கிறிஸ்தவசமயம், நடனம், | சுகாதாரம் | |
| நா.தமிழ்ச்செல்வி | | தமிழ்,ஆங்கிலம் | குழுச் செயற்பாடு |
| தி.புஸ்பரூபன் | சுகாதாரம | விஞ்ஞானம் | |
| சி.சஞ்சீவன் | | | விஞ்ஞானம் |
| கு.ளோரா | | | கிறிஸ்தவ நாகரிகம் |
| ஸ்.ஸ்ரெலின்ற | | கிறிஸ்தவ நாகரிகம் | |
| செ.கேசவன | | | புவியியல்,குடியியல |
| தயாபரி | சித்திரம் | | |
| யோ.நிலாயினி | | சித்திரம் | |
| செ.ஜெயரூபன | | | சித்திரம் |
| இ.சாந்தினி | குழுச்செயற்பாடு | | |
| ம.சசிந்தா | | நடனம் | |
| கா.தனுசா | | | நடனம் |

2008 ஆம் ஆண்டு தரம் 09 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சையில் A சித்தியடைந்த மாணவர்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ச.லவண்யா | தமிழ்,கணிதம், புவியியல்,விஞ்ஞானம் சங்கீதம், | | ஆங்கிலம்,வரலாறு |
| சு.சிவானுஜா | ஆங்கிலம்,வரலாறு குடியியல | | சுகாதாரம்,நடனம் |

ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கிறான்.
அதனால் தான் உலகில் இத்தனை முட்டாள்கள்
இருக்கின்றார்கள்

-அங்கேரி நாட்டுப்பழமொழி

## தரம் 09 இல் பரிசு பெறுவோர் விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| கு.நிதூசனா | வரலாறு,நடனம் | ஆங்கிலம்,புவியியல் சைவசமயம், சுகாதாரம் | தமிழ் |
| ச.சிந்துஜா | சைவசமயம் | | ஆங்கிலம்,விஞ்ஞானம |
| இ.வினோஜா | சைவசமயம் | தமிழ் | குடியியல் |
| க.நிறோஜினி | சுகாதாரம்,சங்கீதம் | விஞ்ஞானம்,வரலாறு | புவியியல் |
| பா.கஜீபன் | | தமிழ்,கணிதம் | சங்கீதம்,சைவசமயம |
| க.திலானி | | குடியியல், றோமன்கத்தோலிக்கம் நடனம் | |
| ச.பவித்திரா | | | சுகாதாரம் |
| பெ.றெபேக்கா | றோமன்கத்தோலிக்கம் | | சித்திரம் |
| அ.யோசுவா | சித்திரம் | | றோமன்கத்தோலிக்கம் |
| பா.ஸ்ரீராஜ் | | சித்திரம் | |
| ம.நிலோராஜ் | | | சித்திரம் |
| க.சர்ணியா | | சங்கீதம் | |
| பொதுத்திறமை:சு.பத்மலோசன் | | | |

## தரம் 10 இல் பரிசு பெறுவோர் விபரம்

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| சி.சங்கீதா | கணிதம்,சைவசமயம் தமிழ்,விஞ்ஞானம் வர்த்தகம்,சுகாதாரம் சங்கீதம், | | ஆங்கிலம்,வரலாறு |

| | | | |
|---|---|---|---|
| கு.லஜந்தா | வரலாறு | கணிதம்,தமிழ் ஆங்கிலம் வர்த்தகம்,நடனம் | சுகாதாரம் |
| ஸ்.பிரியதர்சினி | | கிறிஸ்தவசமயம் குடியியல்,கடல்வளம் | சங்கீதம் |
| சு.கஜானி | ஆங்கிலம்,நடனம் | சைவசமயம் | கணிதம் மனைப்பொருளியல் |
| த.சௌமியா | | | சைவசமயம் விஞ்ஞானம் வர்த்தகம் |
| சி.கம்சியா | | சுகாதாரம்,சங்கீதம் | தமிழ் |
| வி.வினோ | குடியியல் மனைப்பொருளியல் | விஞ்ஞானம் | |
| ப.கௌதமன் | | வரலாறு | |
| கு.அபர்ணா | | மனைப்பொருளியல் | குடியியல் நடனம் |
| ஜ.பகீரதன் | விவசாயம் | | |
| க.ரொபிநாத் | | விவசாயம் | |
| தி.புஸ்பகாந் | | | விவசாயம் |
| த.திவாகரன் | கடல்வளம் | | கிறிஸ்தவசமயம் |
| து.வசீதரன் | | | கடல்வளம் |
| க.கஜனி | கிறிஸ்தவசமயம் | | |

**தரம் 11 இல் பரிசு பெறுவோர் விபரம் க.பொ.(சா.த) விசேட சித்தி பெற்றோர்.**

பெயர்

த. சிந்துஜா

செ. றொசாணி

அ. சுவர்ணா

கி. அபில்ராஜ்

அ. நிரோஜினி

பா. பிரியா

த. தனுசா

**தரம் 12 இல் பரிசு பெறுவோர் விபரம்**

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| அ.பங்குஷா | இந்துநாகரிகம் புவியியல் | | |
| த.கனிஸ்டராஜி | | இந்துநாகரிகம் தமிழ் | புவியியல |
| ப.அஜந்தன் | தமிழ் | புவியியல் | இந்துநாகரிகம் |
| யோ.சுபநேசன் | | | தமிழ் |

**தரம் 13 இல் பரிசு பெறுவோர் விபரம்**

| பெயர் | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் |
|---|---|---|---|
| அ.தர்சிகா | தமிழ் இந்துநாகரிகம் | புவியியல் | |
| கோ.ருசந்தா | புவியியல் | தமிழ் | |
| அ.மரியமலர் | கிறிஸ்தவம் | அளவையியல் | தமிழ் |
| அ.அகழிகா | | | புவியியல் |
| த.சிந்துஜா | | இந்துநாகரிகம் | |
| பா.கேரூபன் | | | இந்துநாகரிகம் |
| கு.வினோஜா | அளவையியல் | சங்கீதம் | |
| வீ.றேகன் | | | அளவையியல் |
| த.தவலக்சி | சங்கீதம் | | |

## விசேட பரிசு பெறுவோர் விபரம்

1. தி.புஸ்பகாந்
2. தி.புஸ்பரூபன்
3. கோ.அரவிந்தன்
4. வி.பானுஜன்
5. சு.சிவானுஜா
6. கு.நிதூசனா
7. ச.சிந்துஜா
8. ச.லாவண்யா

## போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ் பெற்ற மாணவர் விபரம்

### வலயமட்டம் விளையாட்டு

| | நிகழ்ச்சி | தரம் | நிலை |
|---|---|---|---|
| ம.சசினா | உயரம் | 9 | 3 |
| சு.கஜனி | முப்பாய்ச்சல் | 13 | 3 |
| கு.டருளன் | முப்பாய்ச்சல் | | |
| | நீளம் | 13 | 3 |
| சு.சுகன் | ஈட்டி | 11 | 2 |
| கி.பகின்ராஜ் | உயரம் | 9 | 1 |
| ச.திலக்ஷன் | நீளம்.ஈட்டி | 9 | 1 |

*புராணபடனம்*

*சு.கஜானி,சி.கம்சியா (சான்றிதழ்)* 10

*ஆங்கிலதினம்*

*வலயமட்டம்*

| | Copy Writing | Rank |
|---|---|---|
| பா.பிரியதர்சினி | 7 | 1 |
| சி.டிலக்ஷனா | 8 | 1 |
| சு.சிவானுஜா | 9 | 2 |
| கு.வினோஜா | 12 | 3 |

மாவட்ட மட்டம் ஆங்கிலதினம்

| | | |
|---|---|---|
| சி.டிலக்ஷனா | | 1 |

வலய மட்டம் தமிழ்மொழித்தினம்

கட்டுரை வரைதல்

| | | |
|---|---|---|
| சி.டிலெக்ஷனா | 8 | 3 |

தனி இசை

| | | |
|---|---|---|
| கு.விணோஜா | 13 | 3 |

**கணித விஞ்ஞான வினாவிடை தெரிவுப் போட்டி**

| | தரம் |
|---|---|
| க.நிறோஜினி | 9 |
| சி.சங்கீதா | 10 |
| அ.சுவர்ணா | 11 |

சிறுவர் சித்திரப் போட்டி

| | தரம் | நிலை |
|---|---|---|
| பு.நிருஷன் | 4 | 1 |

மாலைகட்டுதல்

| | | |
|---|---|---|
| க.நிசாந்தினி | 7 | 2 |

**மாநகராட்சி மன்றம் நடாத்திய சைவ சமய அறிவுப் போட்டி**

| | தரம் |
|---|---|
| அ.நிறோஜினி | 11 |

அதிவிசேட சித்தி

## ஆரம்பக்கல்வி உறுப்பெழுத்துப் போட்டி

| | தரம் | |
|---|---|---|
| யோ.ஷமிதா | 1 | சிறப்புத்தேர்ச்சி |
| சி.மதுஷா | 1 | சாதாரண தேர்ச்சி |
| ய.உமையாள் | 1 | சாதாரண தேர்ச்சி |
| ச.நிதர்ஷன் | 3 | சாதாரண தேர்ச்சி |
| ர.பிரியா | 4 | சாதாரண தேர்ச்சி |
| வி.லவலக்ஷனா | 5 | சிறப்புத்தேர்ச்சி |
| வி.சயந்தினி | 5 | சாதாரண தேர்ச்சி |

## வாய்ப்பாட்டு மனனப் போட்டி

| | தரம் |
|---|---|
| யோ.ஷமிதா | 1 |
| நா.அபிகா | 1 |
| ச.சரணியா | 1 |

## திருக்குறள் மனனப் போட்டி 2008

| பெயர் | தரம் | பெயர் | தரம் |
|---|---|---|---|
| செ.திவாகரன் | 01 | து.மதுஜா | 02 |
| யோ.சமிதா | 01 | சு.சங்கீர்த்தன் | 02 |
| அ.யதூசா | 01 | ஸ்ரீ.ஸ்ரீகோகுலவதனன் | 02 |
| ம.மதுஷா | 02 | நி.சதுஜன் | 02 |
| சி.றஜீவன் | 02 | ஜெ.பவிதர்சன் | 02 |
| த.மதுரா | 02 | ச.கார்த்திகா | 03 |
| சு.ஜனனி | 02 | அ.அஜினா | 03 |
| த.கீர்த்தனா | 03 | செ.சிந்துஜா | 04 |
| சி.கஜந்தா | 03 | ர.பிரியா | 04 |

| | | | |
|---|---|---|---|
| ஜெ.ஜெயக்குமார் | 03 | வி.லவலக்ஷனா | 05 |
| இ.அனந்தா | 03 | இ.பிரியங்கா | 05 |
| செ.மதுஷன் | 03 | சி.சிவகரன் | 05 |
| ச.நிதர்சன் | 03 | த.பிரதீபன் | 05 |
| செ.டினிஷா | 04 | சு.டிலந்தன் | 05 |
| அ.பகீர்த்தனா | 04 | க.சிந்துஜன் | 05 |
| இ.கயல்விழி | 04 | இ.காயத்திரி | 05 |
| தி.திஷா | 04 | ப.நித்தியா | 05 |
| கி.சர்மியா | 04 | வி.ஷயந்தினி | 05 |
| யோ.சபீனா | 04 | | |

**2008 புலமைப் பரிசில் சித்தியடைந்தோர்**

- சி.சிவகரன்
- த.பிரதீபன்

**2008 சைவ பரிபாலன சபை பரீட்சையில் பதக்கம் பெற்றோர்**

- 1 ஆம் இடம் தங்கப்பதக்கம்:- செல்வி.தர்சிகா மௌனகுரு
- 2 ஆம் இடம் வெண்கலப்பதக்கம் :- செல்வி.சுவர்ணா அழகேந்திரம்

**கணினி மென்பொருள் ஆக்கப்போட்டி 2008 க.பொ.த உயர்தர பிரிவு ஆசிரியை செல்வி சிவாதரி சிவநாதன்**

தரம் 1,2 இற்கான Aboe ஆங்கில நிகழ்ச்சி கொத்தணி மட்டம் முதலாமிடம். குழுநிகழ்ச்சி இரண்டாமிடம்,வலய மட்டம் இரண்டாமிடம்.

## உதைபந்தாட்டம்

16 வயதுப்பிரிவு 1ஆம் இடம்

- இ.கஜேந்திரன் (தலைவர்)
- த.திவாகரன் (உபதலைவர்)
- இ.மதுராஜ்
- ப.லகிந்தன்
- ச.திலக்சன்
- சு.பத்மலோஜன்
- வே.வித்தியரூபன்
- கி.பகீன்ராஜ்
- து.வசிதரன்
- இ.அனுராஜ்
- சி.லக்சன்
- ஆ.யோசுவா
- சி.தனுஸ்கரன்
- இ.கலைக்ஸன்
- ப.தமிழரசன்

**18 வயதுப்பிரிவு 3ஆம் இடம்**

- சு.சுகன் (தலைவர்)
- வே.வினோதரன் (உபதலைவர்)
- த.திலக்
- இ.எக்ராஸ்
- மே.பிலிப்

- ஆ.நற்கருணைராஜ்
- இ.அனோஜன்
- சி.யெனிஸ்ரன்
- இ.பிரதினோத்
- சு. சருசாந்
- இ. றகிலன்
- இ. சுவிந்தன்
- இ. கப்பின்ராஜ்
- இ. சிந்துஜன்
- இ. கனோஜன்
- ர. ஜெசிந்தன்

**வணிக குறுவினாப் போட்டி**

பாராட்டுச்சாந்றிதழ்

ப.கெளதமன் தரம் 10

அ.சுவர்ணா தரம் 11

## பண்ணிசை ஆரம்பக்கல்வி

**தரம்**

| | | |
|---|---|---|
| 1 | அ.யதுரசா | சாதாரண தேர்ச்சி |
| 3 | இ.அனந்தா | சிறப்புத்தேர்ச்சி |
| 5 | இ.காயத்திரி | சிறப்புத்தேர்ச்சி |
| 5 | வி.லவலக்சனா | சாதாரண தேர்ச்சி |

Sathees67@yahoo.co.uk

# மகுட வாக்கியம்

"ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும்"

# Vision - நோக்கு

"மாறிவரும் சமூகக் கட்டமைப்புகளுக்கு அமைவாக இணைந்து செல்லக்கூடிய பிரஜைகளை உருவாக்குதல்"

# Mission - பணிக்கூற்று

"வளங்களை ஒன்றிணைத்து மாற்றங்களை உள்வாங்கி அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட நற்பிரஜைகளை உருவாக்கும் விதத்தில் கல்வி நடவடிக்கைகளை வடிவமைத்து செயற்படுத்துதல்".





அமரர்
திருமதி சித்திரா முத்துராஜா

**எமது வித்தியாலய நுழைவாயில் அமைத்தல்
மற்றும் வருடாவருடம் நடைபெறும் பரிசில் நாள்
தொடர்பான அனைத்துச் செலவுகளையும்
உவந்தளித்த பெருமகன்
முத்துராஜா சிறிகாந்தன் (பாபு) அவர்களின்
அமரராகிவிட்ட அன்னைக்கு
இவ்வறிக்கையைக் காணிக்கையாக்குகின்றோம்.**

"எக்காரியத்தைச் செய்தால் பின்னால் மனம் மகிழ்வுறுவோமோ
எதன் பலனை மனத்தில் உற்சாகத்தோடு அனுபவிக்க முடியுமோ
அதுவே நற்செயல்" - புத்தபிரான்

ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர், பரமேஸ்வராசந்தி.